*23*

# அந்நியர்கள் மற்றும் பரதேசிகள்

## (11:8-22)

*இந்தப் பாடத்திற்கான தலைப்பு எபிரெயர் 11:13ல் காணப்படுகிறது. முன்னதாக நாம், "ஊக்கம் இழந்த நிலைக்கு தேவனுடைய மருந்துக் குறிப்பை" கண்டோம். இந்தப் பாடத்திற்கான இவ்வசனப்பகுதி "உலக எண்ணம் மற்றும் பொருளாதாய சிந்தை ஆகியவற்றிற்கு தேவனுடைய மருந்துக் குறிப்பு" என்ற வகையில் சிந்திக்கப்படலாம். இந்தப்பாடம் ஆபிரகாம்மீது மையங்கொண்டுள்ளது (ஏசாயா 41:8; ஆதியாகமம் 15:6; கலாத்தியர் 3:29).*

## தேவையானது: ஒரு புதிய கண்ணோக்கக் கருத்து

*ஆபிரகாமைப் போல நாம் இந்த பூமியில் "அந்நியரும் பரதேசிகளுமாக" இருக்கிறோம். இந்தப் பாடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் முதலில் ஆபிரகாமை (ஈசாக்கு மற்றும் யாக்கோபு) ஆகியோருடன் கண்ணோக்குவோம். பின்பு நமக்கு சொந்தமான நடைமுறைப் பயன்பாட்டை நாம் ஏற்படுத்துகையில், எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் முதல் வாசகர்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம்.*

#### ஆபிரகாமும் மற்ற முற்பிதாக்களும்

*ஆபிரகாம் தேவனால் அழைக்கப்பட்டபோது அவர், மெசப்பொத்தோமியாவின் சமவெளியில் இருந்தார் (வசனம் 8). "தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்"; அவர் எந்த இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதை விவரிக்கும் பயண விளக்கக்கையேடு ஒன்றை அவருக்குத் தேவன் கொடுக்கவில்லை.*

*ஆபிரகாம் ... "தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து ... , ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்" (வசனம் 9). பரதேசியாகத் தங்கியிருக்கும் அந்நியர் ஒருவர் சமூக அளவுகோலின்படி ஒரு அடிமைக்கு சற்று மேற்பட்டவராகவே இருந்தார். ஆபிரகாமும் அவரது குடும்பத்தில் இருந்தவர்களும் "அந்நியரும் பரதேசிகளும்" ஆக இருந்தனர் (வசனம் 13). "அந்நியர்கள்" என்பவர்கள் வெளிநாட்டுக் காரர்களாக இருந்தனர். "பரதேசிகள்" என்பதற்குப் பதிலாக KJV வேதாகமத்தில் "திருப்பயணிகள்" என்றுள்ளது. திருப்பயணி என்பவர் ஒரு இடத்தில் தங்கியிருக்க மாட்டார், ஆனால் கடந்துசென்று கொண்டே இருப்பார். சாராளின் மரணம் குறித்து ஆபிரகாம் துக்கம் கொண்டாடியபோது அவர் அந்த நாட்டில் வாழ்ந்திருந்தவர்களிடத்தில், "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன்" என்று கூறினார் (ஆதியாகமம் 23:4).*

#### எபிரெயக் கிறிஸ்தவர்களும் நாமும்

*11:8-22ல் கூறப்பட்டவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்ட எபிரெயர் 13:12-14ஐ முன்கண்ணோக்குங்கள். ஆபிரகாமைப்போல நாமும் - நமது விஷயத்தில் சுவிசேஷத்தினால் - அழைக்கப் பட்டிருக்கிறோம் (2 தெசலோனிக்கேயர் 2:14). நமது நிரந்தரமான வாழ்விடம் பரலோகத்தில் உள்ளது. நாம் இந்த உலகத்தின் வழியாகப் பயணம் செய்பவர்களாக மாத்திரம் இருக்கிறோம் (2 கொரிந்தியர் 5:1-8).*

## தேவையானது: ஒரு புதிய வலியுறுத்தம்

நாம் "இந்த பூமியின்மீது அந்நியரும் பரதேசிகளுமாக" இருப்பதால், இந்த வாழ்வின் மீதல்ல ஆனால் வரவிருக்கும் உலகத்தின்மீதே நமது வலியுறுத்தம் இருக்க வேண்டும். முதலில் நாம் ஆபிரகாமையும் பின்பு நம்மையும் கண்ணோக்குவோம்.

#### ஆபிரகாமும் மற்றவர்களும்

ஆபிரகாம் மற்றும் அவரது குடும்பத்தினர் ஆகியோரின் வாழ்வில், இங்கு - மற்றும் - இப்போது என்பதில் வலியுறுத்தம் இருக்கவில்லை. ஆபிரகாம், அடக்கம் செய்யும் இடமாகத் தாம் பயன்படுத்திய மக்பேலா குகையைத் தவிர வேறு எந்த நிலத்தையும் உடைமையாகக் கொண்டிருக்கவில்லை (ஆதியாகமம் 23:17-20).

ஆபிரகாம் மற்றும் விசுவாசிகளாகப் பட்டியலிடப் பட்டுள்ளவர்களின் முன்னுரிமைகளைப் பல வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. ஆபிரகாம் "தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்" (எபிரெயர் 11:10; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:2). அவரும் அவரது சந்ததிகளும் "சுயதேசத்தை நாடிப்போகிற"வர்களாக இருந்தனர் (எபிரெயர் 11:14). "சுயதேசம்" என்பது "தந்தையின் தேசம்" என்று அர்த்தப்படுகிற *patris*, என்ற வார்த்தையில் இருந்து வந்துள்ளது.[1] அவர்கள் "மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்" (வசனம் 16அ). இதன் விளைவாக தேவன் "அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுவதில்லை" (வசனம் 16ஆ; கவனிக்கவும் யாத்திராகமம் 3:6, 15; மத்தேயு 22:32).

#### எபிரெயக் கிறிஸ்தவர்களும் நாமும்

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் தோற்றகால வாசகர்கள், ஆவிக்குரிய விஷயங்களின் முக்கியத்துவத்தை, எல்லாவற்றிற்கும் மேலாக நித்தியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தறிய வேண்டி இருந்தது. நாமும்கூட அதை உணர்ந்தறிய வேண்டியுள்ளது. உலகப்பிரகாரமானவைகள் நமது பார்வையில் பெரிதும் முக்கியத்துவமானவைகளாகத் தோன்றுகின்றன. ஆனால் நாம் காணக்கூடியவை யாவும் தற்காலிகமானவையாகவே உள்ளன. நமது வாழ்வின் வலியுறுத்தமானது வரவிருக்கும் உலகத்தின் மீது இருக்க வேண்டும். நாம் "பரம அழைப்பு" ஒன்றைக் கொண்டுள்ளோம் (எபிரெயர் 3:1). நமது குடியிருப்பு பரலோகத்தில் உள்ளது (பிலிப்பியர் 3:20). அங்குதான் நமது கர்த்தர் இருக்கிறார் (யோவான் 14:2, 3), நமது பொக்கிஷங்களும் (மத்தேயு 6:20) நமது நம்பிக்கையும் (காண்க எபிரெயர் 6:19, 20) அங்குதான் உள்ளன. அங்குதான்

நமது பெயர்களும் எழுதப்பட்டுள்ளன (லூக்கா 10:20). இயேசுவுடன் நாம் அங்கிருக்கும்படி நம்மை அழைத்துச் செல்வதாக அவர் வாக்களித்து இருக்கிறார் (யோவான் 14:3).

நாம் பூலோகத்தையல்ல, பரலோகத்தை நமது உண்மையான நிரந்தரமான வீடாக எண்ணினால், அது நமது வாழ்வில் என்னவிதமான ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தும்! நாம் நேரத்தையும் பணத்தையும் எவ்விதமாக செலவிடுகிறோம் என்றும், நமது தாலந்துகளை எவ்விதம் உபயோகிக்கிறோம் என்பதிலும் ஒரு விளைவை ஏற்படுத்தும். துர்அதிர்ஷ்டங்களை நாம் எவ்வாறு கண்ணோக்கிறோம் என்பதையும் அது மாற்றும். நம்முடைய வாழ்விலுள்ள *எல்லாவற்றையும்* அது பாதிக்கும்.

## தேவையானது: மெய்யான விசுவாசம்

நாம், வாழ்வைப் பற்றி இப்படிப்பட்ட ஒரு கண்ணோக்கைக் கொண்டிருக்க, நித்தியத்தின்மீது வலியுறுத்தத்தைக் கொண்டிருக்கச் செய்வது ஏது? *விசுவாசம்* என்பதே இதற்குப் பதிலாக உள்ளது.

**ஆபிரகாமும் உடன் இருந்தவர்களும்**

ஆபிரகாம் விசுவாசம் கொண்டிருந்ததால், சரியான எண்ணப்போக்கைக் கொண்டிருந்தார் என்று 8 மற்றும் 9 ஆகிய வசனங்கள் வலியுறுத்துகின்றன. "*விசுவாசத்தினாலே* ஆபிரகாம் … அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, …" (வசனம் 8அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "அழைக்கப்பட்டபோது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை நிகழ்கால வினைச்சொல்லாக உள்ளது, இது அந்த அழைப்பு கொடுக்கப்பட்ட உடனே கீழ்ப்படியப்பட்டது என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. "தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்" (வசனம் 8ஆ) - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் கண்டிப்பாகத் தமது விசுவாசத்தின் அடிப்படையில் தமது சொந்த நாட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். "*விசுவாசத்தினாலே* அவன் [ஆபிரகாம்]" கானான் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நூறு ஆண்டுகள் அளவாக "பரதேசியைப்போலச் சஞ்சரித்து" வாழ்ந்தார் (வசனம் 9; என்னால் வலியுறுத்தப் படுகிறது).

ஆபிரகாமின் விசுவாசத்தில் அவரது குடும்பத்தினரும் பங்கேற்றனர். ‘‘விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து" (வசனம் 11அ). சாராளின் விசுவாசத்தினுடைய பலத்தின் மீதல்ல ஆனால் அவளது விசுவாசத்தின் கருத்துப்பொருளான தேவனுடைய உண்மைத்தன்மையின் மீதே கவனக்குவிப்பு உள்ளது. "விசுவாசத்தினாலே ஆபிரகாம் … ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" (வசனம் 17அ; காண்க வசனங்கள் 18, 19). "விசுவாசத்தினாலே ஈசாக்கு … யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்" (வசனம் 20அ). "விசுவாசத்தினாலே யாக்கோபு … ஆசீர்வதித்து … தொழுது கொண்டான்'' (வசனம் 21). "விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி …" (வசனம் 22அ).

இதன் விளைவாக, ‘‘இவர்களெல்லாரும், … விசுவாசத்தோடே

*மரித்தார்கள்" (வசனம் 13). அதையே எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் தமது வாசகர்களிடத்தில் விரும்பினார் மற்றும் அதையே தேவன் நம்மிடத்திலும் விரும்புகிறார் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 14:13)!*

**எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் வாசகர்களும் நாமும்**

*விசுவாசத்தின் அவசியம் என்பது நமது மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது (எபிரெயர் 11:6; ரோமர் 10:17). தேவனுடைய வார்த்தையை - ஆபிரகாம் செய்தது போன்றே - எடுத்துக்கொள்ளும் விசுவாசம் நமக்குத் தேவைப்படுகிறது. ஆபிரகாம் செய்தது போன்றே, தேவனுடைய வார்த்தையின்படி செயல்படும் விசுவாசம் நமக்குத் தேவைப்படுகிறது (யாக்கோபு 2:14-26).*

*இந்த உலகத்தின் பிரச்சனைகள் சிலவேளைகளில் நம்மை மேற்கொள்ளும்படி அச்சுறுத்துகின்றன. நாம் எவ்வாறு உயிர்பிழைத்திருக்க முடியும்? நாம் விசுவாசத்தினால் மேற்கொள்ள முடியும். விசுவாசத்தினால் வாழ்ந்து அந்த விசுவாசத்துடனேயே மரிக்கத் தேவன் நமக்கு உதவுவாராக.*

---

குறிப்பு

[1]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 133.